## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.09/2023 | Date | : 23.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : கௌதம் | Calling | : |
| Father Name | : கிருஷ்ணன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.02.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எருமாபாளையம், வெங்கடதாஸ் காட்டில் வசித்து தறித்தொழில் செய்து வருகிறேன். கடந்த 15-01-2022 ம் தேதி, இரவு சுமார் 01.30 மணியளவில் பழனி பாதயாத்திரை செல்வதற்காக சேலம் to கோவை செல்லும் சாலையில் உள்ள ஆவரங்கபாளையம் PRM திருமண மண்டபம் அருகே சாலையின் இடதுபுறமாக நானும், மணிகண்டன், கார்த்தி ஆகியோரும் சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது, எங்களுக்கு பின்னால் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் எங்கள் மூவரின் மீதும் மோதிவிட்டார். மோதியதில் நாங்கள் மூவரும் கீழே விழுந்துவிட்டோம். எனக்கு காலிலும், தலையிலும் அடிப்பட்டது. கார்த்திக்கு சிராய்பு காயம் ஏற்பட்டது. மணிகண்டனுக்கு பின் தலையில் அடிப்பட்டது. பின்னர், அருகில் இருந்தவர்கள் எங்களை சேலம் விம்ஸ் மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள். நானும், கார்த்தியும் முதலுதவி சிகிச்சை எடுத்து கொண்டு டிஸ்ஜார்ஜ்

ஆகிவிட்டோம். பின்னர், இது சம்பந்தமாக கடந்த 19-01-2022 ம் தேதி சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :-

1) சம்பவ நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்க்கு அருகே வெளிச்சம் இல்லை என்றால் சரிதான். எங்களது ஆடையிலோ, நாங்கள் எடுத்து சென்ற பேக்-லோ வெளிச்சம் தரும் ஸ்டிக்கர் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நாங்கள் மூவரும் பேசிக்கொண்டு ஒரு வரிசையில் அருகருகே சாலையில் நடந்து சென்றோம் என்றால் சரிதான். நான் நடந்து சென்றுகொண்டிருந்ததால் பின்னால் எந்த வாகனம், எவ்வாறு வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) விபத்து தார்சாலையில் தான் நடந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே தார்சாலையை ஒட்டியவாறு மண்சாலை இருந்தது என்றால் இருட்டாக இருந்ததால் நாங்கள் தார்சாலையில் தான் சென்றோம். இந்த விபத்திற்கு காரணம் நாங்கள் தான் என்றும், நாங்கள் தான் தார்சாலையில் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் பேசிக்கொண்டே ஒரு வரிசையில் சென்றதால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கு பின்னால் எத்தனை நபர்கள் நடந்து வந்தார்கள் என்றால் சுமார் 26 நபர்கள் வந்தார்கள். அவர்கள் எவ்வளவு தூரத்தில் வந்திருப்பார்கள் என்றல் சுமார் 10 அடி தூரத்தில் வந்திருப்பார்கள்.

3) இழப்பீடு பெற வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் இழப்பீடு பெற்றுத்தர வேண்டி பொய் புகார் கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடன் வந்த மணிகண்டன், கார்த்தி ஆகியோரும் நடந்து சென்றுகொண்டிருந்ததால் பின்னால் வந்த வாகனம் எவ்வாறு வந்தது என்றும் அவர்களுக்கும் தெரியாது என்றால் சரிதான்.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Gowtham

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.09/2023 | Date | : 23.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : மணிகண்டன் | Calling | : |
| Father Name | : பாஸ்கர் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.02.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எருமாபாளையம், வெங்கடதாஸ் காட்டில் வசித்து தறித்தொழில் செய்து வருகிறேன். கடந்த 15-01-2022 ம் தேதி, இரவு சுமார் 01.30 மணியளவில் பழனி பாதயாத்திரை செல்வதற்காக சேலம் to கோவை செல்லும் சாலையில் உள்ள ஆவரங்கபாளையம் PRM திருமண மண்டபம் அருகே சாலையின் இடதுபுறமாக நானும், கௌதம், கார்த்தி ஆகியோரும் சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது, எங்களுக்கு பின்னால் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் எங்கள் மூவரின் மீதும் மோதிவிட்டார். மோதியதில் நாங்கள் மூவரும் கீழே விழுந்துவிட்டோம். கௌதமுக்கு நெற்றியில் அடிப்பட்டது. கார்த்திக்கு முழங்காலுக்கு கீழே சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எனக்கு பின் தலை, இடது கை, இரண்டு கால் முட்டியில் அடிப்பட்டது. பின்னர், அருகில் இருந்தவர்கள் எங்களை சேலம் விம்ஸ் மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள். கௌதமும், கார்த்தியும் முதலுதவி சிகிச்சை எடுத்து கொண்டு டிஸ்ஜார்ஜ் ஆகிவிட்டார்கள். நான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

குறுக்கு விசாரணை :-

1) சம்பவ இடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 25 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ சமயத்தில் நாங்கள் மூவரும் பேசிக்கொண்டு ஒரு வரிசையில் அருகருகே சாலையில் நடந்து சென்றோம் என்றால் சரிதான். நான் முன்னால் நடந்து சென்றுகொண்டிருந்ததால் பின்னால் எந்த வாகனம், எவ்வாறு வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் நாங்கள் தான் என்றும், நாங்கள் தான் தார்சாலையில் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் பேசிக்கொண்டே ஒரு வரிசையில் சென்றதால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2) சம்பவ நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்க்கு அருகே வெளிச்சம் இல்லை என்றால் சரிதான். எங்களது ஆடையிலோ, நாங்கள் எடுத்து சென்ற பேக்-லோ வெளிச்சம் தரும் ஸ்டிக்கர் எதுவும் இல்லை என்றால் சரிதான். எங்களுக்கு பின்னால் எத்தனை நபர்கள் நடந்து வந்தார்கள் என்றால் சுமார் 25 நபர்கள் வந்தார்கள். அவர்கள் எவ்வளவு தூரத்தில் வந்திருப்பார்கள் என்றல் சுமார் 10 அடி தூரத்தில் வந்திருப்பார்கள்.

3) இழப்பீடு பெற வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் இழப்பீடு பெற்றுத்தர வேண்டி பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடன் வந்த மணிகண்டன், கார்த்தி ஆகியோரும் நடந்து சென்றுகொண்டிருந்ததால் பின்னால் வந்த வாகனம் எவ்வாறு வந்தது என்றும் அவர்களுக்கும் தெரியாது என்றால் சரிதான்.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Manikandan